# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2010
கார்த்திகை 5
துல்ஹஃதா 30
புதன் (21-11-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 49
விலை சதம் 50


# விபுலானந்தர் முத்திரை வெளிவருவதற்கு காரணஸ்தர்கள் யார்?

## தேவநாயகம் - இராசதுரை அறிக்கைப் போர்!

ஐக்கிய தேசியக் கட்சியின் பழம்பெரும் உறுப்பினரான நீதியமைச்சர் திரு: தேவநாயகத்துக்கும், அரசாங்கத்துடன் இடையிலே ஒட்டிக்கொண்ட பிராந்திய அமைச்சர் இராசதுரைக்குமிடையே குத்துவெட்டுக்களும் மோதல்களும்தோன்றியிருப்பதாக சில மாதங்களாக அரசியல் அரங்கில் பேசப்பட்டுவந்தது. இப்போது சுவாமி விபுலானந்தர் முத்திரை வெளியிடும் நிகழ்ச்சியுடன் இந்த உட்பூசல் விரிசலாகி அம்பலத்துக்கு வந்திருக்கிறது. இருவரும், முத்திரை வெளியிட்டதற்கு தனித்தனியே தாமே காரணம் என்று அறிக்கைப் போர் நடத்தியுள்ளனர். இருவரது சுவையான அறிக்கைப் போரையும் கீழேபடியுங்கள்.

நீதியமைச்சர் திரு, தேவநாயகம் 4.11-79ல் வீரகேசரியில் வெளியிட்டிருந்த அறிக்கை வருமாறு,—

''அருட் திரு விபுலானந்த அடிகளாருக்குநினைவுமுத்திரை வெளியிடப்பட வேண்டுமென்பது தொடர்பாக சுமார் 10 வருடங்களுக்கு முன்னர்நான்எடுத்த முயற்சி இப்பொழுது கைகூடுகிறது. இது நான் செய்த பாக்கியம் என்றே கருதுகிறேன்.

''பத்து ஆண்டுகளுக்கு முன் இதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. அருட் திரு விபுலானந்த அடிகளாருக்கு ஞாபகார்த்தமுத்திரையினை வெளியிட்டு அன்னாருடைய சேவைக்கு கௌரவமளிக்க வேண்டுமென்றுஅப்போது தபால் அமைச்சராக இருந்த மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமாவிடம் கோரிக்கைவிடுத்தேன். அவரும் உடனடியாக நடவடிக்கை எடுத்தார்- முத்திரைக்கான வரைபடங்களும் தெரிவு செய்யப்பட்டு முத்திரை வெளியீட்டுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. ஆனல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுதேர்தல் நடைபெற வேண்டியேற்பட்டமையால் முத்திரை வெளியீடு நிறுத்தப்பட்டுவிட்டது.

—4-ம் பக்கம் பார்க்க

## இனங்களின் தனித்துவம் கெடக்கூடாது என்கிறார்ஜனாதிபதி

'இந்நாட்டில் சிங்களவர்களும், தமிழர்களும் முஸ்லிம்களும் பிரஜாவுரிமைபெற்ற மலையகத் தமிழர்களும், தனித்துவம் கெடாமல், சமத்துவ அந்தஸ்துடன் என்றும் வாழவேண்டும்.''

—இவ்வாறு இரத்தினபுரி நகரமண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் 21வது மாநாட்டில் பேசுகையில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். இம்மாநாட்டில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில் மத்தியூவும் கலந்துகொண்டார்.

(வீரகேசரி 17-11-79)

# இலங்கைவாழ் முஸ்லிம்கள் சிங்களவர்களாம்!

## சபாநாயகர் சொல்கிறார்

"வரலாற்றுச் சான்றுகளை ஆராய்ந்து பார்க்கும்போது இலங்கை வாழ் முஸ்லிம்கள் சிங்களவர்களாவர், மதத்தால் வேறுபட்ட போதிலும் முஸ்லிம்கள் சிங்களவர்களாவர். 2500 வருடங்களாக பௌத்தர்கள் இலங்கையில் வாழ்ந்து வருவதுபோன்று இஸ்லாம் தோன்றியகாலத்திலிருந்தே முஸ்லிம்கள் இலங்கையில் இனபேதங்களின்றி கௌரவத்துடன் வாழ்ந்துவருகின்றனர்- சிறுபான்மை இனத்தவராக இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி புரியும் நோக்கத்தில் வரவில்லை. இலங்கையைச் சூறையாடும் நோக்கத்தில் வரவில்லை, வர்த்தகர்களாகவும் வைத்தியர்களாகவும் இலங்கைக்கு வந்த எமது மூதாதையர்கள் பெரும்பான்மை மக்களுடன்சகோதரர்களாகவே வாழ்ந்து வந்தனர்!'

இவ்வாறு மாவனல்லை மயுரபாத சிங்களமத்திய மகாவித்தியாலய முஸ்லிம் மஜ்ஜிஸ் நடாத்திய ஹிஜ்ரி1400 வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய சபாநாயகர் அல் ஹாஜ் பாக்கீர் மாக்கார் கூறியிருக்கிறார்-

—(ஆதாரம்: தினகரன் 15.11.79)

சபாநாயகரின் மேற்படி கருத்துச் சம்பந்தமாக முஸ்லிம் அறிஞர்களுடைய அபிப்பிராயங்களை சுதந்திரன் வரவேற்கிறது—ஆர்

# வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களுக்கு பட்டைநாமம்!

## தெற்கு வாழ்கிறது வடக்குகிழக்கு வீழ்கிறது!

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுவதை அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தமது சம்பிரதாயமாகக் கொண்டிருந்த போதிலும் — நிதியமைச்சரினல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய வரவுசெலவுத் திட்டத்திலும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்தி முற்ருகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாரிய அபிவிருத்திக்குத் திட்டம் எதுவும் சமர்ப்பிக்கப்படவுமில்லை; வரவுசெலவுத் திட்டத்தில் அதற்கு நிதி ஒதுக்கப்படவும் இல்லை,

புதிய வரவுசெலவுத்திட்டத்தில் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்கு பல கோடிக்கணக்கான ரூபாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனல், வடக்குகிழக்கு மாகாண அபிவிருத்திக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவும் இல்லை.

இவ்வாருன புறக்கணிப்பு நடப்பது இதுவே முதல் தடவையல்ல: கடந்த 30 ஆண்டுகளாகவடக்குகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டே வருகிறது சிறீலங்காசுதந்திரக்கட்சியின் ஆட்சியின் போதும், யூ.என்.பி. ஆட்சியின்போதும், இப்புறக்கணிப்பு தொடர்ந்து வருகிறது, இதன் காரணமாகவே தமிழ் மக்கள் தமக்குஇன்று சுதந்திரம் கோருகின்றனர்,

இதுபற்றி யாழ் பா.உ. திரு: வெ, யோகேஸ்வரன் குறிப்பிடுகையில். வடக்கு கிழக்கு மாகாணங்கள் பொருளாதார அபிவிருத்தித்துறையில் ஒதுக்கப்பட்டிருப்பது எமது கோரிக்கையை நியாயப்படுத்துகிறது. எமது பிரதேசத்தை அவர்கள் அபிவிருத்தி செய்யத் தேவையில்லை, எமது பிரதேசத்தை ஆளும் அதிகாரத்தை எம்மிடம்ஒப்படைக்கட்டும் அதைநாமே அபிவிருத்திசெய்து கொள்ளுகிறோம் என்ருர்.

# தேவநாயகத்தின் குற்றச்சாட்டுக்கு இராசதுரை பதில்

''தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் கட்சியினரும் பாராளுமன்றத்தில் இருந்தனர். அவர்களுடைய சார்பில்ஒருவர் தானும் மட்டக்களப்பில் பிறந்த மகானுக்கு (சுவாமி விபுலானந்தருக்கு) கௌரவம் கொடுக்கத்தவறிவிட்டனர்;"

—நீதியமைச்சர் தேவநாயகம் (வீரகேசரி-14.11-79]

''சுவாமி விபுலானந்தருக்கு ஒருமுத்திரை வெளியிட வேண்டுமெனபல்லாண்டுகளுக்கு மேலாக நூற்றுக்கணக்கான மேடைகளில் நான் பேசி வந்ததை நாடு அறியும். பட்டிருப்பு தொகுதியின் முன்னுள் நாடாளுமன்ற உறுப்பினர்காலஞ்சென்ற இராசமாணிக்கம் சுவாமி விபுலாநந்தருக்கு முத்திரை வெளியிட வேண்டுமென நாடாளுமன்றத்தில் முதற்குரல் எழுப்பினுர்''

—பிராந்திய அமைச்சர் செ. இராசதுரை (தினபதி 17.11.79)

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# "எமது பொருளாதார அமைப்பு சமதர்ம அடிப்படையிலே அமையும்"

## இளைஞர் கருத்தரங்கில் அமிர் கொள்கை விளக்கம்

தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் தமிழ்ஈழ விடுதலை தொடர்பான ஆய்வரங்கு ஒன்று அக்டோபர் 27, 28ம் திகதிகளில் தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் மாவை சேனாதிராசா தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ''தமிழ்ஈழத்தின் அரசியல் சமூக பொருளாதார அமைப்பு'' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் முதலாவது பகுதி இங்கு இடம்பெறுகிறது.

"உங்களுடைய இரண்டாவது விடயம் தமிழீழத்தின் அரசியல் சமூக-பொருளாதார அமைப்பு என்று கூறப்பட்டிருக்கின்றது. அது ஒரு மிகப் பாரிய விஷயம். ஆனால் சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால், அரசியல் அமைப்பு, சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பு இவையெல்லாம் ஒன்றுடனொன்றுபின்னிப்பிணைந்தது. சமுதாய வாழ்வின் முக்கியமானது பொருளாதார அடிப்படையைக் கொண்டு தான் வாழ்வு அமைக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பொருளாதார அமைப்புக்கேற்ற வகையில் உருப்பெறுவது அரசியலமைப்பு. அரசியல் சுதந்திரத்தின் மீது தான் பொருளாதார, சமூக சுதந்திரங்கள் கட்டியெழுப்பப்படுகின்றன. இதை மனத்திற்கொண்டு தான் புறநானூற்றில் தமிழ் புலவர், ''நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்கிறார்.

அரசியற் சுதந்திரத்தின் அடிப்படையே — அரசியற் சுதந்திரத்தின் நோக்கமே— பொருளாதார சுதந்திரம் இல்லாவிட்டால் அவன்வாழ முடியாது. அந்தப் பொருளாதார சுதந்திரத்தைத் தனி மனிதன் பெறுவதல்ல; சமுதாயம் பெறவேண்டும்; சமூகத்திலேயுள்ள ஒவ்வொருவரும் பெற வேண்டும்.

முதலாளித்துவ அமைப்பு 18ம் நூற்றாண்டு தொடக்கம் நிலப்பிரபுத்துவ முறையிலேயிருந்து வந்தது. கைத்தொழிற்புரட்சியின் பின்பு உற்பத்திச் சாதனங்கள் பொதுவான அமைப்பைப் பெற்ற பின்பு —உற்பத்திச் சாதனங்கள் பொதுவான அமைப்பைப்பெற்றதென்று நான் கூறும்போது, நிலப்பிரபுத்துவ முறையின் கீழ் விவசாயத்தைத் தவிர ஏனைய உற்பத்திகள் எல்லாம் சிறுசிறு அளவில், ஒரு நெசவுத் தொழிலாளி தானாகவே நெசவு செய்த அந்தத் துணியை விற்பனை செய்கின்றான், ஒரு இரும்புத் தொழிலாளி தானே ஒரு உலைக்களத்தை வைத்து அதிலே தனது தொழிலைச் செய்கிறான். இந்த விதமான அமைப்பைத்தான் பெற்றிருந்தது-தனிப்பட்ட உழைப்பாளிகள் இந்த விதமான தொழில்களைச் செய்து வந்தார்கள்.

கைத்தொழிற் புரட்சியின் பின்பு பெருமளவிலே இயந்திரசாதனங்களைக் கொண்டு பெரிய முதலீட்டின் அடிப்படையிலே பல நூற்றுக்கணக்கான தொழில்களையும் ஒன்று திரட்டி ஒரு இடத்திலே வைத்து சமுதாயத்துக்குத் தேவையான பொருட்களை உற்பத்திசெய்யும் ஒரு நிலை ஏற்பட்டது. அந்தப் பொருளாதார அமைப்பிலேயே சமதர்மத்தினுடைய பொருளாதாரப் பொதுவுடமையினுடைய அடிப்படை ஏற்பட்டு விட்டது என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தமது தேவைக்கு உற்பத்தி செய்யாமல் அல்லது தனி ஒருவன் தனது தொழிலாக உற்பத்தி செய்யாமல் பலர் சேர்ந்து உற்பத்தி எப்பொழுது நடைபெறத்தொடங்கியதோ அது முதல் சமுதாயக் கண்ணோட்டத்தோடுநடைபெற வேண்டியதொன்றாகியது.

ஆனால் முதலாளித்துவ அமைப்பிலே தனி மனித சுதந்திரம் என்று கூறி ஒவ்வொருவரும் தாம் விரும்பிய வகையிலே தமது மூலதனத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களை வேலைக்கமர்த்தி அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியத்தைக்கொடுக்காமல் அவர்களைக் கொண்டு உற்பத்தி செய்வித்து சமுதாயத்திலே அதைக் கூடிய இலாபத்துக்கு விற்று, ஒரு சிலர் செல்வத்தைத் திரட்டி அந்த விதமான ஒருநிலைமை 19ம் நூற்றாண்டிலே இருந்து வந்தது.

அந்தக் கட்டத்திலே தான் 1848ம் ஆண்டிலே கம்யூனிசக் கொள்கைப் பிரகடனம் என்று கால்மாக்சும், ஏங்கிள்சும், அக்கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டார்கள். அதற்கு முன்பு சமதர்மத்தைப் பற்றிச் சிந்தித்த பலர் இருந்தாலும். விஞ்ஞான ரீதியாகச் சமதர்மத்தைப்பற்றிச் சிந்தித்து அதைச் செயற்படுத்துவதற்கான திட்டம் அப்பொழுது தான் தீட்டப்பட்டது. இன்று உலகிலே எந்த நாடும் முற்று முழுதான முதலாளித்துவ நாடாகவும் இல்லை. எதுவும் முற்று முழுதான கம்யூனிச நாடாகவும் இன்னும் ஆகவில்லை. சோவியத் ரஷ்யா என்றால் என்ன? சீனா என்றால் என்ன? வேறு எந்த நாடு என்றால் என்ன முற்று முழுதான கால் மாக்ஸ் கனவு கண்ட அந்தக் கம்யூனிச சமுதாயமாக இன்னும் ஆகிவிடவில்லை. கால் மாக்சினுடைய ''டாஸ் கப்பிட்டலை'' நீங்கள் படித்துப் பார்த்தால், அவர் எழுதிய நூல்களை படித்துப் பார்த்தால், எல்லாம் எல்லோருக்குமாக உற்பத்தி செய்யப்படுகின்ற அந்தச் சூழ்நிலையிலே, ஒவ்வொருவரும் தமது தேவைக்கு ஏற்றவற்றை எடுத்துக் கொள்ளுகின்ற அந்தச் சூழ்நிலையிலே ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உழைப்பை நல்கிக் கொண்டிருக்கின்ற அந்தச் சூழ் நிலையிலே, அரசே தேவையற்று, அரசாங்கம் என்பதே அழிந்து- மனிதன் ஒரு உயர்ந்த நிலைக்கு வந்துவிடுவான்என்பதே கால்மாக்ஸ் கனவு கண்ட அந்தப்பூரணத்துவம்பெற்ற கம்யூனிசச் சமுதாயம்.

ஆனால் அந்த நிலைக்கு மாறாக அந்த அடிப்படையிலே புரட்சிநடந்து முடிந்து 60 ஆண்டுகளுக்கு மேலாகியும் அரசு இன்னும் பலப்பட்டிருக்க வேண்டிய ஒரு நிலையை நாம் காண்கின்றோமே தவிர வேறு ஒன்றுமில்லை. அது மாத்திரமல்ல- இன்றைக்குக்கூட சோவியத் ரஷ்யாவை ஒரு முற்று முழுதான ஒருகம்யூனிச நாடாக அவர்கள் கூறவில்லை. கம்யூனிசக் கட்சி ஆட்சி செய்யும் நாடாக இருக்கின்றதே தவிர. கம்யூனிச சித்தாந்த ரீதியான அந்த இலட்சிய சமுதாயம் இன்னும் அமையவில்லை. அவர்கள் ஒவ்வொரு நாளும் தமது சூழ்நிலைக்கேற்ப, தேவைக்கேற்ப, வசதிக்கேற்ப. சில துறைகளில் தனியார் துறைக்கும் இடமளித்து. சில துறைகளிலே அரசுடைமையாக்குவதை மேற்கொண்டு சில துறைகளிலே கூட்டுறவு முறையை—கூட்டு உற்பத்தி முறையை மேற்கொண்டு நடந்து வருவதை — சோஷலிச நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தன்மை இருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஆனால் அடிப்படையிலே சோசலிச நாடுகளுக்கும். முதலாளித்துவ நாடுகளுக்குமுள்ள வித்தியாசம் சித்தாந்த அடிப்படையில். சோசலிச நாடுகளின் உற்பத்திச் சாதனங்கள், அவற்றை விநியோகிக்கும் கருவிகள், இவை பொதுவுடமையாக, மக்கள் உடமையாக இருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு மிகப்பெரும்பாலான இச்சாதனங்கள், கருவிகள் மக்களுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. முதலாளித்துவ நாடுகளில் சமூக சேவை என்ற அடிப்படையில் உதாரணமாக 1931ம் ஆண்டின் பின் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக ரூஷ்வேல்டினுடைய ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக அமெரிக்காவில் வேலையற்றோருக்கு ஊதியம் வழங்குவது, சமுதாயத்தினுடைய இப்பொருளாதாரச் சிக்கலிலிருந்து ஒவ்வொருவரையும் காப்பாற்றுவது அரசின் கடமை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு முன்னிருந்த அரசு பொருளாதாரத் துறையில் தலையிடக்கூடாதென்ற அந்த நிலையிலிருந்து அரசாங்கம் சற்றுப் பின்வாங்கியது— அமெரிக்கா போன்ற நாட்டிலே.

ஆனால் இங்கிலாந்து போன்ற நாடுகளிலே மாறி மாறி ஆட்சிக்கு வந்த தொழிற்கட்சி அரசாங்கங்களினால் சுகாதாரசேவை போன்றவையும் இரும்புத் தொழில் போன்றவைகள்; நிலக்கரித் தொழில் போன்றவை இப்படிப்பலதொழில்கள் தேசியமயமாக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட ஒரு நிலை. அரசுடமையும். தனியார் துறையும் கலந்த ஒரு நிலையிருப்பதை நாம் காண்கின்றோம்; அதே போன்று ஒரு அமைப்பைத்தான் இந்தியாவில் நேரு அவர்கள், திட்டமிட்ட ஒரு பொருளாதார அமைப்பை பெரிய தொழில்கள் அரசுடமையாகவும், சிறிய தொழில்கள் தனியார் துறைகளாகவும், இப்படிப் பல்வேறு கலப்பு முறைகளைத்தான் இந்தியாவிலே கையாண்டு வந்தார்.

ஆனால் அடிப்படையிலே உலகம் ஒரு திசையை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றது. சமதர்ம சமுதாயத்தை நோக்கி உலகம் சென்றுகொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது இந்த உற்பத்திமுறையினுடைய தவிர்க்க முடியாத ஒரு விளைவாக இறுதியில் வந்து முடியும்; ஆனபடியால் நாங்கள் அரசியற் சுதந்திரத்தோடு பொருளாதார சமூக சுதந்திரத்தை நாடிநிற்கும் பொழுது நாம் அமைக்கவிருக்கின்ற தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்தை சமதர்ம அடிப்படையைக் கொண்டதாகவே அமைக்க வேண்டும்.

—தொடரும்

## வாசகர் கருத்து

ஆசிரியர் அவர்களுக்கு.
சுதந்திரன்
ஐயா,

சென்ற 11.11.79 சுதந்திரன் இதழில் வெளிவந்த ஈழத்துத் தமிழ்த் தேசிய இனமும். இடதுசாரி இயக்கங்களும் என்ற தலையங்கத்தோடு தோழர்தென்மொழி நலங்கிள்ளிஅவர்களால் எழுதப்பட்ட கட்டுரையைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இத்தீவின் இடதுசாரி இயக்கங்கள் என்று கூறப்படும் இயக்கங்களின் பல வகை நிலைப்பாடுகள் பற்றி திறனாய்வுக் கண்ணோட்டத்தோடு அக்கட்டுரை எழுதப்பட்டிருப்பது வரவேற்கத் தகுந்தது.

இத்தீவின் பாரம்பரிய மார்க்ஸிய வாதிகள் என அழைக்கப்படுவோர் இங்கு நடைபெற்றுவரும் தேசிய இன ஒடுக்கு முறைக்கும்அதிலிருந்து தவிர்க்க முடியாதபடி எழுந்த இனங்களுக்கிடையிலான சிக்கல்களுக்குமான ஒரு தீர்வாகசோஷலிஷ சமுதாய அமைப்பைப் பரிந்துரைசெய்ததிலிருந்தே மார்க்ஸிய லெனினிஸ கோட்பாட்டில் அவர்களுக்கிருந்த தெளிவின்மை நன்றாக அக்கட்டுரையினால் உணர்த்தப் பட்டுள்ளது. இனப்பிரச்சினையின் கொடூரத் தன்மையினால் எழுந்த தமிழ்த் தேசிய இயக்கங்களை வகுப்புவாத இயக்கங்கள் எனக்குறிப்பிட்டு அவர்களை ஒதுக்க முனைந்தபோது அவர்கள் இப்பிரச்சினையில் முற்றாகவே மார்க்ஸிய— லெனினிய அணுகுமுறையிலிருந்து விலகி நின்றார்கள்என்பது வெளிப்படையான உண்மையாகும். இந்நிலைகளுக்கான அடிப்படைக்காரணம் என்னவெனில் இவ் இடதுசாரிகள் என அழைக்கப்படுவோர் பேரினவாதத்துக்கும் கட்டுண்டு கிடத்தலே ஆகும். இனங்களுக்கிடையிலான சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளாத எவரும்அல்லது எந்தஇயக்கமும் பேரினவாதத்திலிருந்து தன்னைவிடுவித்துக் கொள்ளமுடியாததாகும். இந்த அடிப்படை உண்மையை தோழர் நலங்கிள்ளி தமது கட்டுரையில் அழகுற எடுத்துக் காட்டியுள்ளமை பாராட்டுக்குரியது.

இன்றும்கூட இத்தீவிலுள்ள தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு அதேபாரம்பரிய இடதுசாரிகள் என அழைக்கப்படுவோர்கூறிவரும்தேர்வுக்கான காரணங்கள் இந்நாட்டுக்கே உரித்தானசிறப்புத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டவை என்ற வாதம்மார்க்சியத்தின்சர்வதேசியத்தன்மைக்கு முரணாவதாகும். ஏனெனில் மார்க்ஸியவாதி ஒருவருக்குச் சொந்த அணுகுமுறை (Subiective approach) என ஒன்று இருக்கக் முடியாது, அப்படி ஒன்றுக்கு அவர் உரிமை கோருமிடத்துஅவர் மார்ச்ஸீயத்தைத் தமது எண்ணப்படி கொச்சைப் படுத்துகிறார் என்பதைவிட மார்க்ஸியத்தின் சார்பில் பேசுகிறார் எனல் பொருந்தாது.

தோழர் தென்மொழி நலங்கிளியின் கட்டுரைகளை ஒத்தக்கட்டுரைகள் சுதந்திரனில் வெளிவருதல் தேசிய இனப்போராட்டம் மீதான தெளிவானமார்க்ஸியக் கண்ணோட்டத்தை வாசகர் மத்தியில் உருவாக்க உதவும்

இப்படிக்கு,
உண்மையுள்ள
ஆ. சேயோன்:
பண்ணாகம்,
சுழிபுரம்.
2.11.79.

# பிரெஞ்சு ஜனதிபதிக்கு தங்கப் பதக்கம்

அகதிகளின் நலனுக்குச் செய்த சேவைகளுக்காகப் பிரெஞ்சுக் குடியரசு ஜனதிபதி வலேறி கிஸ்காட்டி எஸ்டெயிங்குக்கு ஐ.நா. மான்ஸென் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது என ஐ.நா ஸ்தாபனம் நேற்று அறிவித்தது

அகதிகளுக்குத் தாராள உணர்ச்சியுடன் புகலிடம் அளிக்கும் கொள்கைக்காகப் பிரான்சைப் பாராட்டி அப் பதக்கமும் அதனுடன் 50.000 டாலர் பரிசும் வழங்கப்பட்டுள்ளதாக ஐ. நா. அகதிகள் ஹைகமிஷனர் திரு: பௌல் ஹார்ட்லிங் கூறினர்;

வருடந்தோறும் வழங்கப்படும் இப் பதக்கத்துக்கு இப்பொழுது செத்துவிட்ட சர்வதேச சங்கத்துக்கு அகதிகள் ஹைகமிஷனராகவிருந்த பிரபல நோர்வே ஆராய்ச்சியாளரான திரு. பிறிட் ஜோப் மான்ஸெனின் பெயரிடப்பட்டுள்ளது.

— 12-11-79—தினகரன் செய்தி

யூனெஸ்கோ மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக பிரான்சின் தலைநகரான பாரிசுக்குச்சென்று திரும்பிய சிறீலங்காவின் கல்வியமைச்சர், (தமிழ் ஈழ வீடுதலை வீரர்களான) தமிழ் இளைஞர் 2000-ம் பேருக்குத் தமது நாடு அரசியல் அடைக்கலம் தந்திருப்பதாக அந்நாட்டின் கல்வி அமைச்சர் தம்மிடம் கூறியதாக வெளியிட்ட செய்தி இலங்கைப் பத்திரிகைகளில் முற்பக்கச் செய்திகளாக வெளிவந்ததைத் தமிழ் ஈழம் இச்சந்தர்ப்ப'த்தில் நன்றியுடன் நினைவுகூருகிறது.

# யாழ் மாவட்ட அரச அதிபர் பற்றி பண்டிதரின் கேள்விக் கணைகள்

திரு. கா. பொ. இரத்தினம்— பொது நிர்வாக. உள்நாட்டலுவல்கள்அமைச்சரிடம் 22-11-79ல் பின்வரும் கேள்விகளைப் கேட்பார்—

[அ) அனலைதீவு சன சமூக நிலையங்களின் சமாசம். பிரயாணிகள் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகள் 1979 செப்ரெம்பர் 6 ஆம் தேதி யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து பகிரங்கமாகக் கொடுத்த மகஜரின் பிரதியை அவர் சமர்ப்பிப்பாரா?

(ஆ) அந்தமகசரில்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவதற்கு இன்றுவரை அரசாங்க அதிபர் எடுத்த நடவடிக்கைகளை அவர் கூறுவாரா?

(இ) அன்றேல் ஏன்?

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் திரு, இரத்தினம் கேட்கவிருக்கும் கேள்விகள்—

(அ) யாழ் மாவட்ட அரசாங்கஅதிபர்யோகேந்திராதுரைசுவாமி 23,09,79 இல் நெடுந்தீவை உத்தியோக முறையில் சென்று பார்வையிட்டார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அரசாங்க அதிபர் தலைமையில்நெடுந்தீவுஉதவி அரசாங்க அதிபர்பணிமனையில் நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களையும் அவர்களுடைய பெயர்களையும் அவர் கூறுவாரா?

(இ) இக்கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களை அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இக்கூட்டத்தில் (1) ஆராயப்பட்ட நெடுந்தீவு மக்களின் வேண்டுகோள்களும் குறைகளும் எவை என்பதையும் (2) இவைஒவ்வொன்றும் பற்றி அரசாங்க அதிபர் கூறிய மறுமொழியையும் அவர் கூறுவாரா?

(உ) இக்குறைகளை நீக்குவதற்கும் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கும் இன்றுவரை அரசாங்க அதிபர் எடுத்தநடவடிக்கைகளை அவர் கூறுவாரா?

(ஊ) நெடுந்தீவு சென்று திரும்பியதற்கு அவருக்கும் அவருடன் சென்ற அரசாங்க உத்தியோகத்தர்ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட (1) பயணப்படி (2) வாழ்க்கைப்படி எவ்வளவு என்பதையும் அவர் கூறுவாரா?

## இராசதுரையிடம் கேள்வி

திரு. கா.பொ.இரத்தினம் பிரதேசஅபிவிருத்திஅமைச்சரிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்பார்—

(அ) அவரது அமைச்சின் கீழுள்ள அரசாங்க திணைக்களங்கள் அரசாங்க, சார்பானை நிறுவகங்கள் என்பவற்றை அவர்கூறுவாரா?

(ஆ) பிரதேசஅபிவிருத்தி அமைச்சில் பணியாற்றும் செயலாளரின் பெயரையும் ஏனைய எல்லா உத்தியோகத்தர்களின் பெயர்களையும் அவர்களின் பதவிகளையும் அவர் கூறுவாரா?

(இ) பிரதேசஅபிவிருத்தி அமைச்சுக்கும்அதன்கீழுள்ள திணைக்களங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணம் பற்றிய பின்வரும் விபரங்களை அவர் கூறுவாரா?

(1) நிதி ஆண்டு 1979க்குரிய செலவுத் தலைப்புக்கள்:

(2) ஒவ்வொருதலைப்பின் கீழும் ஒதுக்கப்பட்ட பணத்தின் தொகை;

(3) பணம் எப்பொழுது ஒதுக்கப்பட்டது!

# கல்வி, கலை பண்பாட்டுக்கழக ஆண்டுக்கூட்டம்

சென்ற 4.11.79 ஞாயிற்றுக்கிழமை பி.ப, 3.15மணிக்கு,யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கலை மண்டபத்தில், கழகத்தலைவர் திரு,த. சோமசுந்தரம் சட்டத்தரணி அவர்களது தலைமையில் நடைபெற்றது.

முதன்முதலில் தமிழ்த் தாய் வாழ்த்துப்பாடலை இசையாசிரியர் திரு. இரா, நடராசன் பாடினர்.

தலைவர் திரு: சோமசுந்தரம் தனது தலைமையுரையில் பேசியபோது கழகத்தின் வருங்காலத் திட்டங்களைச் செயற் படுத்துவதற்கான கட்டிடங்களை அமைப்பதற்கு வேண்டிய நிலப்பரப்பினை, யாழ்ப்பாணம் வில்லூன்றியில் பேராசியர் இரா. குமாரவடிவேல்அவர்கள், கழகத்திற்கு வழங்கி இருக்கிருர்கள் என்றும். கழகச் செயலகக் கட்டிட கால்கோள் விழா சென்ற 24:8.79 இல் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது என்றும் கூறினர்கள், பொதுச் செயலாளர் ஓவியர் ச. பெனடிக்ற் கழகத்தின் ஆண்டறிக்கையை வாசிப்பதற்கு முன்னர், நமது கழகத்தின் சின்னம் கண் என்றும்அக்கண்உறக்க மற்று உலகத்தை விழித்துப் பார்த்துக்கொள்கிறது என்றும் சிறப்பித்துப் பேசினர்,

ஆண்டறிக்கை வாசிக்கப் பெற்றபின்னர் பொருளாளர் திரு: கனககேசவன்சட்டத்தரணி அவர்கள் கணக்கறிக்கையை வாசித்தார்கள்,

மேற்படி கூட்டத்திற்கு வருகை தந்திருந்த கழகக் காப்பாளர்களில் ஒருவராகிய அருள் திரு; சே, தனிநாயகம் அடிகளார் அவர்கள்வாழ்த்துரைவழங்கினர்.

இக்காப்புக் கழகத்தில் முன்னுள் இலங்கை வங்கி இயக்குநர் திரு. செ. லோகநாதன் அவர்களும்முன்னுள் அரசாங்க அதிபர் திரு. தி. இராசதுரை அவர்களும் காப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்;

# தேசியக் கொடி எரிப்புசந்தேகநபர் கைது!

1978ம் ஆண்டு செப்டம்பர் 7ம் திகதி புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்த தினத்தில்கிழக்குமாகாணத்திலுள்ள சித்தாண்டி மகா வித்தியாலயத்தில்சிறீலங்காவின் தேசியக் கொடியை எரித்தசம்பவத்தில்தொடர்புடையவர் என்று கூறப்படும் சங்கர்என்ற இளைஞரை பொலிசார் கைது செய்துள்ளனர், மற்றோர் சந்தேகநபரான கிருஷ்ண பிள்ளை என்பவர் ஏரூவூர் பொலிசாரிடம் சரணடைந்தாராம், இது சம்பந்தமாக மேலும் இருவரை பாதுகாப்புப் படையினர் தேடி வருகின்றனர்.

(வீரகேசரி 3-11,79)

# தானறியாச் சிங்களம் தன் வேலைக்குச் சேதம்!

சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்ருல் மட்டுமே புதிய தமிழ் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, வேலை நிரந்தரம் ஆகியன கிடைக்கும் என்பது அரசாங்கத்தின் சட்டம்.

தமது சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்வதற்காக மூன்று இ.போ.ச. தமிழ் ஊழியர்கள் போலியான சிங்களத் தேர்ச்சிச் சான்றிதழைக் காட்டியதாக கண்டுபிடிக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தானறியாச்சிங்களம் தன் உத்தியோகத்துக்கு சேதம்!

யாழ் மாவட்டத்தில்

செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம்

**இன்றுடன்**

**128-வது நாள்**

# அறவழி வாழ்வுப் பயிற்சி முகாம்

அறவழி வாழ்விலும், அறநெறி நடவடிக்கை முறைகளிலும், அமெரிக்கா, இந்தியா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் பயிற்சிபெற்றவர்களின் வழிப்படுத்தலின் கீழ் ஒரு வார காலப்பயிற்சி டிசம்பர் மாதம் 18ம் திகதி. கோப்பாய் தொகுதியில் நடைபெறவுள்ளது, சாதி ஒழிப்பு, சீதனஒழிப்பு, சமூக அநீதிகளைப் போக்குதல் போன்ற துறைகளில் ஈடுபடத் தொண்டர்களை உருவாக்கிப் பயிற்சியை முடித்த பின்னர் தத்தம் இடங்களில் உள்ளவர்களைத் தொடர்ந்தும் பயிற்றுவிக்கவும் இப் பயிற்சி முகாம் வழி வகுக்கும். எனவே, இப்பயிற்சி முகாமில் பங்கு கொள்ள விரும்புவோர். 1-12-79க்கு முன்னர் செயலாளர், அறவழிப்போராட்டக்குழு, வேல்சினிமாவீதிசாவகச்சேரி எனும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கும்வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

—ஜீவன்

# தமிழ் நாட்டிலும் மனித உரிமை தினம் கொண்டாட ஏற்பாடு

இலங்கைத் தமிழ் மக்களின் அவலநிலைமைக்கு உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக தமிழகத்தில் வருடாவருடம் மனித உரிமைகள்தினத்தை 10.12.79 ஒடுக்கப்பட்ட தமிழ் ஈழத் தினமாக அனுட்டிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே,

இந்தியா இடைக்காலப் பொதுத்தேர்தலை எதிர் நோக்கியுள்ள காலகட்டத்தில் வரும் இவ் வருடம் மனித உரிமைகள் தினத்தையும் வழமைபோல் ஒடுக்கப்பட்ட தமிழ் ஈழத்தினமாக அனுட்டிக்க தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் இந்தியக்கிளையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இதன் மூலம் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளது நிலைப்பாட்டை தமிழக வாக்காளர்களுக்கு உணர்த்துவதே மேற்படி இயக்கத்தின் நோக்கமென அதன் பேச்சாளர் ஒருவர் கருத்துத்தெரிவித்துள்ளார்;

இந்திரா காங்கிரஸ் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் அ.தி,மு.க. தி.மு.க; தமிழரசு கழகம் போன்ற இயக்கங்களின் நிலை அறியப்பட்டதே; ஏனைய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு தமிழக வாக்காளர்முன் வெளிம்படுத்தப்பட இந்த இயக்கப் உதவுமென தமிழக தமிழ் ஈழ நட்புறவுக் கழகம் நம்புகிறது.

# காசி, மாவைமீது தேசத்துரோக வழக்கு 1980ம் ஆண்டு சனவரி25ல்!

1978ம் ஆண்டு செப்டம்பர் 7ம் திகதிசிறீலங்காவின் புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்த நேரத்தில் அரசுக்கு எதிராகப் பொதுமக்களைத் தூண்டிவிடவும், தமிழ்—சிங்கள இனப்பகையைத் தூண்டிவிடவும், முயற்சித்ததாக காசி ஆனந்தன், மாவை சேனுதிராசா உட்பட மட்டுநகர் இளைஞர்கள் எட்டுப்பேர் மீது அரசாங்கத்தினுல் தொடரப்பட்டுள்ள வழக்கு1980ம் ஆண்டு சனவரி25ம்திகதி கொழும்பு நீதிமன்றத்தில்விசாரணைக்கு எடுக்கப்படும்;

இவ்வழக்கில்இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றப்பத்திரிகை 15-11.79 கொழும்பு நீதிமன்றத்தில் படித்துக் காட்டப்பட்ட போது இவர்கள் எண்மரும் தாம் குற்றவாளிகள் எனத் தெரிவித்தனர்.

# மண்டூர் த.வி.கூ. கிளையின் தலைவர் மீது தாக்குதல்

மண்டூர் தமிழர்விடுதலைக் கூட்டணிக்கிளையின் தலைவரான திரு. சுப்பிரமணியத்தின் வீட்டுக்குள் பொலிசார் புகுந்து அவரை மோசமாகத் தாக்கிய பின்னர், பொலீஸ் நிலையத்துக்கு இழுத்துச் சென்று பூட்டி வைத்துள்ளனர். அவரது வாக்குமூலம் எதுவும்பெறப்படவில்லை.

—இத்தகவலை ஜனதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ, அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்;

# முத்திரைக்கு காரணம் ராசதுரையே என்கிறார் யோகேந்திரா துரைசாமி

''விபுலாநந்த அடிகளாரின் நினைவாக முத்திரை வெளியிட விரும்பியஅமைச்சர் இராசதுரை இது விடயமாக ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தார். அவரின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு இன்று முத்திரை. வெளியிடப்படுகிறது':

—யாழ் அரச அதிபர் யோகேந்திரா துரைசுவாமி (ஈழநாடு 19.11-79)

—1-ம் பக்கத் தொடர்

மீண்டும் ஐ.தே.கட்சி பதவிக்கு வந்ததும் விபுலாநந்த அடிகளாருக்கு முத்திரை வெளியிட முன்வந்திருக்கிறது அரசாங்கம்.

கல்வி கலாசாரத்துறையில் உயர் திரு.விபுலாநந்த அடிகள் ஆற்றிய மகத்தான சேவைக்குமதிப்புக் கொடுக்குமுகமாக ஒரு ஞாபக முத்திரை வெளியிட வேண்டும் என நான் கொடுத்த விண்ணப்பத்தினை மந்திரி அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கு நான் அவருக்கு நன்றிதெரிவிக்கிறேன், சுவாமி விபுலானந்தரின்சேவைகள்குறித்து 15.9.1969ல் நான் பாராளுமன்றத்தில்பேசியிருந்தேன்.

## இராசதுரை பதில்

நீதியமைச்சரின் மேற்படி அறிக்கைக்குப் பதிலளிப்பது போல தினபதி 17,11.79 இதழில் பிராந்திய அமைச்சர்இராசதுரை விடுத்திருந்த அறிக்கை வருமாறு:—

''விபுலானந்த அடிகளாருக்கு அவர்களது அருந்தொண்டினை நினைவு கூரும் வகையிலே ஒரு நினைவு முத்திரை வெளியிட வேண்டும் என்று இலங்கையில் உள்ள கல்வித்தாபனங்களும் சமயத் தாபனங்களும் பல ஆண்டுகளாகவேகுரலெழுப்பிவந்தன. எனினும் காரியம் கைகூடவில்லை.

சுவாமி விபுலாநந்தருக்கு ஒரு முத்திரை வெளியிட வேண்டும் என்று பல்லாண்டுகளுக்கு மேலாக நூற்றுக்கணக்கான மேடைகளில் நான் பேசி வந்ததை நாடு அறியும்.

பட்டிருப்புத்தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் இராசமாணிக்கம் சுவாமி விபுலாநந்தருக்கு முத்திரைவெளியிட வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் முதற்குரல் எழுப்பினர்.

''அவரைத் தொடர்ந்து சிலவருடங்களுக்குப்பின்கல்குடாத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியமைச்சருமாகிய தேவநாயகம் சுவாமி விபுலானந்தருக்கு முத்திரை வெளியிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். அதன் பின் அரசாங்கம் மாறியதால்இது நிறைவேறவில்லை.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1977ம் ஆண்டு பதவிக்கு வந்தது! அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் சுவாமி விபுலானந்தரின் எண்ணம் இல்லாமலே கழிந்தன. நான் அமைச்சராகப் பொறுப் பேற்ற அன்றே ஜனாதிபதியிடம் பலகோரிக்கைகளைச் சமர்ப்பித்தேன்.

அவற்றில் முதலாவது கோரிக்கை சுவாமி விபுலானந்தருக்கு முத்திரைவெளியிட வேண்டுமென்பதாகும் எனது கோரிக்கையைக்கண்ணுற்ற அதிஉத்தம ஜனாதிபதி அதை உடனடியாக நிறைவேற்றி வைக்குமாறு தபால் தந்தி அமைச்சருக்குப் பணிப்புரைவழங்கினார். அதன் பெறுபேருகவே விபுலானந்த அடிகளின் முத்திரை வெளிவருகிறது-

இம்முத்திரைக்கான வரைபடம் முதலியவற்றை தபாலமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பல தடவை எனது காரியாலயத்தில் என்னோடு கலந்தாலோசித்து முத்திரையைத் துரிதமாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள்.

''இன்று ஆட்சியிலிருக்கும் அதி உத்தம ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கம் ''இந்து சமயம், இந்து கலாசாரம்'' தொடர்பான பணிகளுக்கென ஒரு அமைச்சினை நிறுவி அத்துறையில் அமைச்சராக என்னை நியமித்த வேளையிலே, அந்த நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றி வைக்கும் பாக்கியம் கிடைத்திருக்கின்றது''

இவ்வாறு திரு. இராசதுரை தம்மால்தான் முத்திரை வந்ததாகத் தம்பட்டமடித்துள்ளார். தினபதிப் பத்திரிகை இராசதுரைக்கு நீதியமைச்சரைவிட கூடுதலான முக்கியத்துவம் அளித்து வருவது தெரிந்ததே.

## இராசதுரை கப்சிப்

மட்டக்களப்பில் நடைபெற்ற சுவாமி விபுலாநந்தர் முத்திரை வெளியீட்டு விழாவில் அமைச்சர் இராசதுரையையும் வைத்துக்கொண்டு பேசிய அமைச்சர் தேவநாயகம் இராசதுரை கூறியது தவறுஎன்று நேரடியாகக் கண்டித்துள்ளார்- முத்திரை வெளியிடும்படி முதன் முதல் கேட்டவர் இராசமாணிக்கம் அல்லவென்றும், அதுதாமே தான் என்றும். இராசதுரை கூறியது தவறென்றும் சுடச்சுட இராசதுரைக்கு முகத்திலறைந்ததுபோலப் பேசியபோது, இராசதுரை ''கப்சிப்'' என்று வாயடைத்து இருந்தார்.

# சின்ன மனிதர்களை எண்ணிச் சிரிப்போம்!

''மட்டக்களப்பிலே விபுலானந்த அடிகளார் தொடக்கி வைத்த சிவானந்த வித்தியாலயமும், திருகோணமலையிலே தொடக்கிவைத்த இந்துக்கல்லூரியும், யாழ்ப்பாணத்திலே தொடக்கிவைத்த வைத்தீஸ்வர வித்தியாலயமும் அவர்களது தனிப்பெருந் தொண்டினைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன''

—இவ்வாறு பிராந்திய அமைச்சர் திரு. செ. இராசதுரை தினபதிக்கு எழுதியுள்ள கட்டுரையொன்றில் சுவாமி விபுலாநந்தரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆம், உண்மைதான். சுவாமி விபுலானந்தர் தமிழ் மொழியை, இனத்தை. தமிழ் நாட்டை உயிருக்குயிராக நேசித்த ஒரு பெரும் மேதை.

வடக்கும், கிழக்கும் — திருக்கோணமலையும் மட்டக்களப்பும் யாழ்ப்பாணமும், கைகோத்து ஒரே மாநிலமாகத் திரண்டெழுந்து தமிழ் தேசியத்தை உருவாக்கி வளர்க்க வேண்டும் என்பதே சுவாமி விபுலாநந்தர் கண்ட கனவாகும்.

வடக்கு, கிழக்கு என்று பிரிவினைகளையும் — மட்டக் களப்பான், யாழ்ப்பாணத்தான், திருக்கோணமலையான் என்ற குறுகிய பிரதேச உணர்வுகளையும் சுவாமி ஊட்டி. வளர்த்தவரல்ல — மாருக அவற்றைத் தாக்கி அழித்தவர்.

பிரதேச, மாகாண, சாதிப்பிரிவினைகளைக் கடந்து எங்கு வாழ்ந்தாலும் தமிழன் தமிழனே என்று சிந்தித்துச் செயற்பட்டவர் சுவாமி விபுலாநந்தர்.

தமிழ் தேசிய உணர்வின் அடிப்படையிலேயே தமிழ் ஈழத்தின் மூன்று முக்கிய நகரங்களிலும் அவர் மூன்று கல்லூரிகளை தொடக்கிவைத்தார்.

ஆனுல், இன்று விபுலானந்த அடிகளுக்கு முத்திரை வெளியிடுபவர்கள் என்ன செய்கிறார்கள்?

வடக்கு, கிழக்கு என்று தமிழ் மாநிலத்தைக்கூறு போடுகிறார்கள்! மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான் என்று குறுகிய பிரதேசக் கூச்சலைத் தமது சொந்த அரசியல் ஆதாயத்துக்காகவே எழுப்புகிறார்கள்.

தமிழ் பேசும் மக்களைக் கூறுபோட்டழிக்கும் ஏகாதிபத்திய சூழ்ச்சிக்கு இரையாகிறார்கள்.

''ஆழக்குழிவெட்டி. நீளப்புதைத்து'' விட்ட பிரதேசப் பிரிவினைக் கூச்சலுக்கு உயிரூட்டி தமிழினத்தைச் சிறுமைப்படுத்துகிறார்கள்.

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் சுடர்விட்டுப் பிரகாசித்த சுவாமி விபுலானந்த அடிகளையே ''கிழக்கு மாகாணம்'' என்ற குறுகிய வேலிக்குள் தமது சுயநலத்துக்காக அடைத்து வைக்கிறார்கள்.

இன்றேல், சுவாமி விபுலானந்தர் முத்திரை வெளியீட்டு நிகழ்ச்சிக்கு தமிழர் தலைவர் — எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அழைக்கப்படாததேன்?

தமிழ் பேசும் அனைத்து பா. உ.க்களும் அழைக்கப்படாததேன்?

தமது குறுகிய பிரதேச அரசியலை வளர்ப்பதற்கு தமிழ்த் தேசியத்தின் வடிவமான சுவாமி விபுலானந்த அடிகளை சுயநலமிகள்பயன்படுத்துகிறார்களே?

''வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்தனையது உயர்வு''

என்ற தமிழ் மறையை எண்ணி இந்தச் சின்ன மனிதர்களை நினைத்துச் சிரிக்க வேண்டியதுதான்.

—'கோ'

சுடர்
CHUDAR

கார்த்திகை இதழ்
வெளிவந்து விட்டது

இவ்விதழில்

காலம் ஒரு தூரிகை
—கே. ஆர். டேவிட்
(இம்மாத பரிசுக்கதை)

ஹைக் கோட்டில்
நிற்கிறார்கள்
—செ. குணரத்தினம்
(நகைச்சுவைக் கவிதை)

கீறல்கள்
—க. கலாமோகன்
(இரசிகமணி நினைவு
பரிசுக்கதை)

தெருவிளக்கு
குத்துவிளக்காகின்றது
—ரவிவர்மன்
(சிறுகதை)

உணர்ச்சிக் கவிஞரின்
ஆக்கங்கள்
ச. ஸ்ரீ காந்தா

இலக்கிய
கலந்துரையாடல்
— தமிழ்ப்பிரியா
—தாமரைச்செல்வி

மற்றும் பல கவிதைகள்
சிறுகட்டுரைகள்
தகவல்களுடன்
நக்கீரனின் பதில்கள்,
'அரி'யின் மனம்விட்டுச்
சிலவார்த்தைகள்
மணிக்கவிதைகள்
மலர்ச்சரங்கள் போன்ற
பலவும் இடம் பெற்றுள்ளன

நீங்கள் கொடுக்கும்
ஒரு ரூபாவுக்கு மேல்
பெறுமதிவாய்ந்தது
சுடர்

தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி
நிர்வாகி
சிலோன் நியூஸ் பேப்பர்ஸ்
லிமிட்டட்
194ஏ, பண்டாரநாயக்கவீதி
கொழும்பு-12

# திறமையே கல்வித்தரத்தின் அளவுகோல்!

''திருகோணமலை மாவட்டத்தின் கல்வித்தரம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. 1977ம் ஆண்டில் திருகோணமலையில் இருந்து ஆக 13 மாணவர்கள் மட்டுமே திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் சென்றனர். இதுஎமது கல்வியின் சீர்கேட்டையே எடுத்துக் காட்டுகிறது. மாவட்ட அடிப்படையில் 42 பேரும் பின்தங்கிய பகுதியென்ற அடிப்படையில் 44 பேரும் 1977ல் திருமலையிலிருந்து பல்கலைக்கழகம் சென்றிருந்தாலும், எமது கல்வி நிலை உயர்ந்து விட்டதென்றுகூற முடியாது, திறமை அடிப்படையில்அதிகமாணவர்கள் தெரிவு செய்யப்படும் பொழுதுதான் ஒரு மாவட்டத்தின் கல்வித்தரம் உயர்ந்துள்ளதா என்பதை அளவிடமுடியும்''

இவ்வாறு திருகோணமலை வட்டாரப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய இரா. சம்பந்தன் பா.உ, குறிப்பிட்டுள்ளார்.

# குண்டு வெடிப்பு வழக்கு

'அவ்ரோ' விமான குண்டு வெடிப்பு' வழக்கு விசாரணை டிசெம்பர் 17ம் திகதி கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு, ஓ. எஸ், எம். செனிவிரத்தினமுன்னிலையில் நடைபெறும். இந்த வழக்கின் சந்தேகநபரான புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த குலசேகர ராஜசிங்கத்திடம் 5-11.79 அன்று தமிழில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது 1978ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ம்திகதி இரத்மலானையில் வைத்து அவ்ரோ விமானத்துக்கு பயங்கர ஆயுதம் ஒன்றால் சேதம் விளைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தமிழ் பேசும் நடுவர்கள் முன்னிலையிலேயே இவ்வழக்கு விசாரிக்கப்பட வேண்டுமென எதிரியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. ஆர். பாலேந்திரா கேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் திகதி புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது.